# பாதுகாப்பில் குழந்தைகள்

## ‘குழந்தைகள் நீதிமன்றம்’ எடுத்த முடிவில் எனக்கு திருப்தியில்லை: நான் என்ன செய்யலாம்?

1 2 3 4 5



Legal Aid NEW SOUTH WALES

# பாதுகாப்பில் குழந்தைகள்

## 4 'குழந்தைகள் நீதிமன்றம்' எடுத்த முடிவில் எனக்கு திருப்தியில்லை: நான் என்ன செய்யலாம்?

'**NSW** சட்ட உதவி' (**Legal Aid NSW**) என்ற அமைப்பினரிடமிருந்து கிடைக்கும் மொழிபெயர்க்கப்பட்ட 'கவனிப்பில் குழந்தகள்' (**Kids in Care**) எனும் தொடரில் ஐந்து குறுநூல்கள் அடங்கியுள்ளன.

**1** 'சமூக சேவைகள்' அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனது பிள்ளைகளைப் பற்றிக் கதைக்க விரும்புகிறார்கள்: என்ன நடக்கும்?

**2** 'குழந்தைகள் நீதிமன்ற' த்திற்குச் செல்வது

**3** நிலைமைகள் இப்போது மாறியுள்ளன, எனவே என் பிள்ளைகள் திரும்ப என்னிடம் வரவேண்டும் என்று விரும்புகிறேன்: நான் என்ன செய்யவேண்டும்?

**4** 'குழந்தைகள் நீதிமன்றம்' எடுத்த முடிவில் எனக்கு திருப்தியில்லை: நான் என்ன செய்யலாம்?

**5** என் பிள்ளைகள் பாதுகாப்பில் இருக்கும்போது என்ன நடக்கும்?




**NSW சட்ட உதவி அமைப்பினால் தயாரிக்கப்பட்டது** அக்டோபர் **2013**


சட்டத்தைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கான பொதுவானதொரு வழிகாட்டியாக இந்த வெளியீடு அமையும் என்று உத்தேசிக்கப்படுகிறது. இதை ஒரு சட்ட ஆலோசனையாக எடுத்துக் கொள்ளாதிருத்தல் நலமாகும், மற்றும் உங்களது குறிப்பிட்ட சூழ்நிலையைப் பற்றி சட்டதரணி ஒருவரிடம் நீங்கள் கதைக்க வேண்டுமெனப் பரிந்துரைக்கப்படுகிறது. இந்த ஏடு அச்சிடப்படும்போது இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையாக இருந்தன, ஆனால் இது மாற்றங்களுக்கு உள்ளாகக்கூடியது.

Order publications online at **www.legalaid.nsw.gov.au/publications**
or email **publications@legalaid.nsw.gov.au** or call **9219 5028**

இவ்வெளியீட்டை வாங்குவதற்கான உத்தரவை **www.legalaid.nsw.gov.au/publications** எனும் வலைத்தளம் மூலமாகவோ அல்லது **publications@legalaid.nsw.gov.au** எனும் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்புங்கள் அல்லது **9219 5028** எனும் இலக்கத்தினை அழையுங்கள்.

நீங்கள் செவிமடுப்புத்திறன் குறைந்தவராக.:.பேச்சுக்குறை உள்ளவராக இருந்தால் 'நேஷனல் ரிலே சர்வீஸ்' (NRS) அமைப்பினை **133 677** என்ற இலக்கத்தில் அழைத்து எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி மொழிபெயர்ப்பு சேவை **131 450**


'ஷாவல்கோஸ்ட் சமூக சட்ட மைய' த்தினரது 'குழந்தைகள் நீதிமன்றம், பாதுகாப்பு, என் குழந்தையும் நானும்' என்ற முந்தைய வெளியீட்டை 'NSW சட்ட உதவி' அமைப்பு நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறது.


'NSW சட்ட உதவி' குறித்த மேலதிகத் தகவலுக்கு:

Legal Aid NEW SOUTH WALES

## ‘மேல்முறையீடு’ (யீநயட) என்பது என்ன?

‘குழந்தைகள் நீதிமன்ற’ த்தின் முடிவில் ஒருவருக்கு திருப்தி இல்லாதபோது உயர் நீதிமன்றம் ஒன்று புதிய முடிவு ஒன்றை மேற்கொள்ளலாம் என்பதை ‘மேல்முறையீடு’ குறிக்கும். அனைத்து முடிவுகளையும் எதிர்த்து மேல்முறையீடு செய்ய இயலாது.

## யார் மேல்முறையீடு செய்யலாம்?

ஏற்படுத்தப்பட்ட உத்தரவில் திருப்தி இல்லை என்றால், ‘குழந்தைகள் நீதிமன்ற’ த்தில் நடந்த ஆரம்பநிலை வழக்கு விசாரணையில் தரப்பினராக இருந்த எவரொருவரும் முடிவை எதிர்த்து மேல்முறையீடு செய்யலாம். விசாரணையில் நீங்கள் ஒரு தரப்பினராக இல்லை என்றால், மேல்முறையீடு ஒன்றை உங்களால் தாக்கல் செய்ய இயலாது.

## நான் எப்போது மேல்முறையீடு செய்யலாம்?

‘குழந்தைகள் நீதிமன்ற’ வழக்கு முடிந்து நீதிமன்றம் இறுதி உத்தரவு பிறப்பிக்கும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டும். உங்களை வழக்கில் ஒரு தரப்பினராக சேர்த்துக்கொள்ள நீதிமன்றம் மறுக்கும்போது இதற்கு விலக்கு உண்டு. அப்படி நடந்தால், வழக்கு முடியும் வரை காத்திருக்காமல், அந்த முடிவை எதிர்த்து நீங்கள் உடனே மேல்முறையீடு செய்யலாம். ‘இடைக்கால உத்தரவு’ (‘interim order’) (அதாவது, நீதிமன்ற வழக்கு விசாரணைகள் நடந்துவரும் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட தற்காலிக உத்தரவு) ஒன்றை எதிர்த்து நீங்கள் மேல்முறையீடு செய்ய இயலாது.

### மிகவும் காலம் தாழ்த்தாதீர்கள்

‘குழந்தைகள் நீதிமன்ற’ முடிவை எதிர்த்து நீங்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால், முடிவு மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 28 நாள் அவகாசம் உங்களுக்கு உண்டு.

உதாரணத்திற்கு, கீழ்வரும் முடிவுகளை எதிர்த்து உங்களால் மேல்முறையீடு செய்ய இயலாது:

- பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் நிலையில் உங்களுடைய பிள்ளைகள் இருக்கின்றனர் (‘உறுதிப்படுத்தல்’ (establishment’) என்ற முடிவு,
- ‘குழந்தைகள் நீதிமன்ற மருந்தக’ த்தினால் மதிப்பீடு செய்யப்படவேண்டும் என்ற விண்ணப்பத்தை மறுக்கும் முடிவு,

- உங்கள் பிள்ளைகளுக்கான இடைக்கால பிள்ளைவளர்ப்புப் பொறுப்பினை யாராவதொருவருக்குக் கொடுக்க வேண்டும் என்ற முடிவு,
- உங்கள் பிள்ளைகளுடன் நீங்கள் கொள்ளும் இடைக்கால தொடர்பின் அளவை நிர்ணயிக்கும் முடிவு.

## எனது மேல்முறையீட்டை நான் எங்கு சமர்ப்பிக்க வேண்டும்?

'குழந்தைகள் நீதிமன்ற' குற்றவியல்நடுவரால் எடுக்கப்பட்ட முடிவை எதிர்த்து மேல்முறையீடு செய்ய, உங்களது மேல்முறையீட்டினை நீங்கள் 'மாவட்ட நீதிமன்ற' (District Court') த்தில் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயம்.

'குழந்தைகள் நீதிமன்ற' த் 'தலைவ' (President) ரால் எடுக்கப்படும் முடிவை எதிர்த்து மேல்முறையீடு செய்ய உங்களது மேல்முயைீட்டினை நீங்கள் 'உயர் நீதிமன்ற' (Supreme Court) த்தில் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயம்.

மிகவும் வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளில், 'மாவட்ட நீதிமன்ற' த்தினால் எடுக்கப்பட்ட முடிவினை மீள்பரிசீலனை செய்யுமாறு உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பது சிலவேளைகளில் சாத்தியமாகலாம். இதைப் பற்றி ஆலோசணை பெற நீங்கள் சட்டதரணியொருவரைப் பார்க்க வேண்டியிருக்கும்.

## மேல்முறையீட்டில் என்ன நடக்கும்?

மேல்முறையீட்டை விசாரிக்கும் நீதிமன்றம் முழு வழக்கையும் புதிதாகப் பார்வையிட்டு, எப்படிப்பட்ட இறுதி முடிவுகளை எடுப்பது என்பது குறித்து தனது சொந்த முடிவினை மேற்கொள்ளும். 'குழந்தைகள் நீதிமன்ற' த்தில் ஏற்கப்பட்ட அதே சான்றுகளை இந்த நீதிமன்றம் ஏற்கும், அத்துடன் இந்த நீதிமன்றம் கருத்தில்கொள்ள வேண்டிய அவசியமுள்ள புது சான்றுகள் ஏதுமிருப்பின் அவற்றையும் ஏற்கும்.

## இடைக்கால உத்தரவு ஒன்றைக் குறித்து எனக்கு திருப்தியில்லை என்றால் நான் என்ன செய்யலாம்?

இடைக்கால உத்தரவு ஒன்றை எதிர்த்து நீங்கள் மேல்முறையீடு செய்ய இயலாது. அதற்கு பிரதியாக, 'குழந்தைகள் நீதிமன்றம்' பிறப்பித்த இடைக்கால உத்தரவு ஒன்றை எதிர்த்துரைக்க இரு வழிகள் உள்ளன:

- உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு நிலைமைகள் மாறியிருந்தால், இந்த உத்தரவினை 'மாற்றுமாறோ அல்லது ஒழிக்குமாறோ" வேண்டி

'பகுதி 90' விண்ணப்பத்தின் மூலம் நீங்கள் விண்ணப்பிக்கலாம். (பாருங்கள்: குறுநூல் 3: நிலைமைகள் இப்போது மாறியுள்ளன, எனவே என் பிள்ளைகள் திரும்ப என்னிடம் வரவேண்டும் என்று விரும்புகிறேன்: நான் என்ன செய்யவேண்டும்?) ஞூ அல்லது




▲ மிக அரிதான சூழ்நிலைகளில், இடைக்கால உத்தரவு ஒன்றினை மாற்றுமாறு வேண்டி உயர் நீதிமன்ற (Supreme Court) த்திற்கு உங்களால் விண்ணப்பிக்க இயலலாம். இப்படிப்பட்ட தருணங்கள் மிகவும் அபூர்வம் என்பதால், உங்களது வழக்கில் இது சாத்தியமாகுமா என்பது குறித்து சட்டதரணி ஒருவரை நீங்கள் பார்ப்பது நல்லது.

## எனக்கு சட்டதரணி ஒருவர் கிடைப்பாரா?

'மாவட்ட நீதிமன்றம்' (District Court) அல்லது உயர் நீதிமன்ற (Supreme Court) த்தை எதிர்த்து மேல்முறையீடு செய்ய 'NSW சட்ட உதவி' அமைப்பினால் சில வேளைகளில் உதவ இயலும். சட்ட உதவியைப் பெற, நீங்கள் 'சட்ட உதவி' அமைப்பின் 'வழிவகை சோதனை' ('means test') யையும் (வருமானம் மற்றும் சொத்து ஆகியவை குறித்த எமது எல்லைக்குள் நீங்கள் இருக்க வேண்டும் என்பது), 'சட்ட உதவி'-

யின் 'நற்கூறு சோதனை' ('merits test') யையும் (உங்கள் வழக்கு வெற்றி பெறுவதற்கான நியாயமான வாய்ப்பு இருக்கிறது என்பது) நீங்கள் பூர்த்தி செய்யவேண்டும். சட்ட உதவி பெற நீங்கள் தகுதி பெறவில்லை என்றால், உங்களைச் சார்புபடுத்த தனிப்பட்ட முறையில் சட்டதரணி ஒருவருக்கு கட்டணம் செலுத்தும் தெரிவை நீங்கள் மேற்கொள்ளலாம், அல்லது உங்களை நீங்களே சார்புபடுத்திக் கொள்ளலாம்.

## சட்டதரணி ஒருவரைக் கண்டறிதல்

- NSW சட்ட உதவி (Legal Aid NSW): தொலைபேசி 1800 551 589 அல்லது பின்வரும் வலைத்தளத்தினைத் தரிசியுங்கள்: www.legalaid.nsw.gov.au
- Law Access NSW (NSW சட்ட சேவை) தொலைபேசி 1300 888 529 அல்லது பின்வரும் வலைத்தளத்தினைத் தரிசியுங்கள்: www.lawaccess.nsw.gov.au